DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 24.03.2026

| | |
|---|---|
| Case No. | : CC. No.29/2025 |
| Deposition of Witness for Prosecution | : PW.4 |
| Name | : பாலாஜி ரமணன் |
| Father Name | : ரமணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : xxxx |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 24.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜரில்லை). (எதிரிக்காக பிரிவு 355 of BNSS Act–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(11.10.A.M):–**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். கடந்த 11.02.2025–ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சம்பத் என்பவர் நிலைய அலுவலலில் இருந்தபோது புகார்தாரர் தமிழரசன் த/பெ. சரவணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரிலும், ஏற்காடு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலும் ஏற்காடு காவல் நிலைய குற்ற எண்.37/2025, ச/பி. 281, 106 BNS Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **ஏற்காடு அரசு**

**மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் மல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராகவும், பொறுப்பு ஏற்காடு காவல் நிலைய காவல் ஆய்வாளராகவும் இருந்தபோது எனக்கு வழக்கு குறித்து தகவல் கிடைத்த பின் நான் உடனடியாக சம்பவம் இ டம் சென்று காலை 10.30 மணிக்கு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆசியவற்றை சாட்சிகள் விஜயகுமார், கண்ணன் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது. **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் மீனா, ஜோதிகா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பிரேத விசாரணை 11.02.2025-ம் தேதியன்று 12.00 மணி முதல் 14.00 மணி வரை சேலம் அரசு மருத்துவமனை சவகிடங்கு முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் முடிக்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் 521 திரு.கௌரி சங்கர் வசம் அனுப்பபப்பட்டது. **மேற்படி பிரேத விசாரணை அறிக்கையானது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் வழக்கின் எதிரியான விஜய் த/பெ. தியாகராஜன் என்பவரை 14.02.2025-ம் தேதி சுமார் 15.30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டது. பின்பு 14.02.2025-ம் தேதி வழக்கின் எதிரியின் வாகனமாக HONDA DIO TN 30 BK 5097 என்ற பதிவெண்ட கொண்ட வாகனத்தினை வாகன ஆய்விற்காக மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம்,சேலம் கிழக்கு அவர்களிடம் அனுப்பப்பட்டு வாகன ஆய்வு சான்றி பெறப்பட்டது. **மோட்டார் வாகன ஆய்வு சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் 06.03.2025-ம் தேதி பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.கோகுல் ராம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மேற்படி மருத்துவரிடமிருந்து பிரேத பரிசோதனை சான்றிதழ்

பெறப்பட்டது. **பிரேத பரிசோதனை சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தலைமை காவலர் திரு.கௌரி சங்கர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சம்பத் அவர்களை விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. இவ்வழக்கின் சம்பவ இடமானது காவல் நிலையத்திலிருந்து சும ர்ா 7 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரானது 2 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டதற்கு காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரரால் புகாரானது கைப்பட எழுதி நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டதா அல்லது நிலையத்தில் வந்து எழுதப்பட்டதா என்பதை விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன் புகார்தாரருக்கு காலதாமதமாக தகவல் தெரிந்ததால் பின்னர் அவரே கைப்பட எழுதி நிலையத்திற்கு புகாரினை கொண்டுவந்தார்.

2. புகார்தாரருடன் யார் யார் காவல் நிலையத்திற்கு வந்தனர் என்றால் மீனா மற்றும் ஜோதிகா ஆகியோர் உடன் வந்தனர். மேற்படி மீனா மற்றும் ஜோதிகா ஆகியோரை காவல் நிலையத்தில் வைத்து அன்றைய தினமே விசாரணை செய்தீர்களா என்றால் ஆமாம். புகாரில் எதிரியானவர் வாகனத்தினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி எதிரியின் செய்கையை குறித்து கண்ணுற்ற சாட்சி விசாரணை செய்தீர்களா என்றால் இல்லை ஆனால் வழக்கில் இறந்துபோன நபரை ஆஜர் எதிரிதான் ஏற்காடு அரசு மருத்துவமனையில் முதன் முதலில் அனுமதித்துள்ளார் அதைப்பற்றிய தகவலினையும் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. வழக்கில் இறந்துபோன நபர் வேறு வாகனத்திலிருந்து விழுந்திருந்தாலும் அவரை சிகிச்சைக்கு சேர்க்கும் போது சேர்த்த நபரின்

முகவரியினை தருவதை சட்ட நடைமுறை மற்றும் வழக்கம் என்றால் சரியல்ல, இவ்வழக்கில் பட்டியல் சாட்சி2 ஆக குறிப்பிடப்பட்டுள்ள மீனா என்பவரின் வீட்டில் இறந்துபோன நபர் பணிபுரிந்து வந்தார் என்பதும், மேற்படி நபரின் மொபைல் நம்பருக்கு எதிரியே போன் செய்து எதிரியும், இறந்துபோன நபரும் ஒன்றாக வாகனத்தில் செல்லும்போது 17-வது கொண்டை ஊசி வளைவில் விபத்து நடந்ததாக சொல்லியுள்ளார். பட்டியல் சாட்சி 2-ன் மொபைல் எண் எதிரிக்கு தெரிவதற்கு வாய்பிள்ளை என்றும், மேற்படி சங்கதிகள் அனைத்தும் போலீசாரே வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல.

4. விபத்தில் இறந்துபோன நபரின் மகனுக்கோ அல்லது மகளுக்கோ முதலில் தகவல் சொல்லியிருக்கலாம் ஆனால் மூன்றாம் நபரிடம் விபத்து குறித்து தகவலினை சொல்லியதாக சொல்வது போலீசாரால் வழக்கு ஜோடிக்கப்பட்ட ஒன்று என காட்டுவதாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல, இவ்வழக்கில் இறந்துபோன நபரும், எதிரியும் பழகி வந்துள்ளனர் ஏற்காட்டில் அறை எடுத்து தங்குவதற்கு வந்தார்கள் என எனது புலன் விசாரணையில் தெரிந்துகொண்டேன்.

5. எதிரிக்கும், வழக்கில் இறந்துபோன நபருக்கும் பழக்கம் இருந்ததற்கான ஆதாரங்களை எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகாரில் எதிரிக்கும், வழக்கில் இறந்துபோன நபருக்கும் பழக்கம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் இறந்துபோன நபரின் பிரேத பரிசோதனை நடைமுறைக்காக மட்டுமே மேற்படி வழக்கானது பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரையும் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, சம்பவ இடம் சென்றே விசாரணை செய்தேன்.

6. பார்வை மகஜர் சாட்சிகள் வந்த இருசக்கர வானத்தின் எண்ணினை எனது விசாரணையில் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே

இவ்வழக்கினை உரிய முறையில் சம்பவ இடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றும், பொய்யான சங்கதிளை சொல்லி எதிரியின் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.45.A.M.)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.03.24 11:48:47 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.